திரு. கு. பெரியசாமி : தஞ்சை மாவட்டம் நாகப்பட்டினத்தில் ஆங்கில மீடியம் பள்ளி நடத்தவேண்டுமென்று உத்தரவு கேட்டு அமைச்சர் அவர்களுக்கு மனுச் செய்திருந்தார்களே, அதற்கு அரசு உத்தரவு கொடுத்து விட்டதா? அங்கீகாரம் அளித்து விட்டதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தனிக் கேள்வி வேண்டும். அதைப்பற்றிய தகவல் இல்லை.

Polytechnics

* 333 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal to increase the number of Government Polytechnics in the State from the year 1974-75;

(b) if so, the details thereof; and

(*c*) the courses that will be offered?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ & உ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, நம்முடைய மாவட்டத்திலே எத்தனை தொழிற் பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன? தஞ்சை மாவட்டத்திலே எத்தனை இருக்கின்றன? அங்கே என்ன என்ன தொழில்கள் கற்றுத்தரப்படுகின்றன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலே 34 பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. அரசினர் சார்பாக நடத்தப்படுவது 11-ம் தனியார் துறையிலே நடத்தப்படுவது 17-ம் இருக்கின்றன, மற்றவை Institutions like leather and chemical technology என்ற முறையிலும் இருக்கின்றன. அவைகளிலே பல்வேறு பாடங்கள் சொல்லித் தரப்படுகின்றன. Civil Engineering, mechanical engineering, automobile engineering, cosmetic and electronics போன்றவை கற்றுத் தரப்படுகின்றன. பெண்களுக்கு தையற் கலை, ஒப்பனை என்று பல்வேறு வகையான பிரிவுகள் இருக்கின்றன. சென்னை சென்ட்ரல் பாலிடெக்னிக்கில் பல்வேறு பிரிவுகள் இருக்

1974 மார்ச் 9]

கின்றன. சில இடங்களில் எல்க்ட்ரானிக் பாடமும் துவக்கப் பட்டிருக்கிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் எத்தனை தொழிற் பள்ளிகள் இருக்கின்றன என்பதைத் தனிக் கேள்வி போட்டால் கூறலாம்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, பாலி டெக்னிக்குகளில் பெரும்பாலும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த வர்கள்தான் படிக்கிறார்கள். அவர்கள் படித்துவிட்டு வந்ததற்குப் பிறகு அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்காமல் திண்டாடு கிறார்கள். ஆகவே அரசாங்க நிறுவனங்களிலேயாவது அவர் களுக்கு முன்னுரிமை கொடுத்து வேலைவாய்ப்புக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்புதான் அப்படி வேலைவாய்ப்பு இல்லாத குறை பாடு இருந்தது. இப்பொழுது பாலிடெக்னிக்ஸ், ஐ.ஐ.டி. இவற்றில் படித்துவிட்டு வருகிற மாணவர்களுக்கு ஓரளவிற்கு வேலைவாய்ப்புக் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருந்து வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், தொழில்துறைக் கல்வி விரிவுபடுத்தப்பட வேண்டும் என்ற கருத்து நாட்டிலே பொது வாக நிலவிவருகிறதே. 1974-75 ஆம் ஆண்டிலே எந்தவிதமான பாலிடெக்னிக்கும் ஏற்படுத்தப்படாமல் இருக்கிறதே, பல்வேறு பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு மத்திய அரசினிடத்திலே உள்ள தொழிற்சாலைகளிலே முன்னிடம் கொடுப்பதற்கு அரசு ஏதாவது செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரங்கள் இல்லை. பாலிடெக்னிக்கு களிலிருந்து படித்துவருகின்றவர்கள் அரசாங்கத் தொழில் நிறு வனங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள். நாம் ஸ்டைபண்ட் கொடுத்து பழகு தொழில் ஏற்படுத்த விண்ணப்பங்கள் கேட்ட அளவிற்குக் கூட எண்ணிக்கை வராமல் குறைந்த அளவிற்குத்தான் வருகிறது. ஆகவே அவர்களுக்கு வேலைவாய்ப்பு ஆங்காங்கே கிடைத்து விடுகிற தன்மைதான் இருக்கிறது. மதுரை போன்ற முக்கியமான நகரங்களிலே பாலிடெக்னிக்குகளிலே உள்ள மெஷின்களைப்

பயன்படுத்தி 6 மணி நேரம் 8 மணி நேரம் என்று பயன்படுத்திக் கொண்டு அவர்கள் தனி ஆர்டர் பெற்றுக்கொண்டுவந்து ஒரு மணி நேரத்திற்கு இவ்வளவு வாடகை என்று கொடுத்துவிட்டு சம்பாதிக்கலாம் என்ற முறை இருக்கிறது. மதுரையிலே ஓரளவிற்கு வெற்றியும் இதிலே கிடைத்து இருக்கிறது. அவர்கள் 100, 200, 300 ரூபாய் வரைகூட சம்பாதிக்கிறார்கள். அரசாங்க நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் பயிற்சி பெற்றவர்கள்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

திரு. ஏ. ஆர். சுப்பையா : சார், அக்ரிகல்சுரல் யுனிவர்சிடி அமைக்கும்பொழுது அதிலே ஒரு பாலிடெக்னிக் அமைப்பதற்காகத் திட்டம் இருந்ததே, இப்பொழுது இருக்கிற பாலிடெக்னிக்குகளில் நடைமுறையில் சிக்கல்கள், வருவாய், ஸ்டூடன்ஸ் குறைவாக வருதல் போன்றவை எல்லாம் இருப்பதால் அக்ரிகல்சுரல் யுனிவர்சிடி ஆரம்பிக்கும் யோசனையை மறுபரிசிலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நிலைமையை ஆராய்ந்துதான் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

திரு. கா. காளிமுத்து : தொழில் கல்விக்கு என தனிப் பல்கலைக்கழகம் நிறுவிடும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைத்தான் மத்திய அரசிடம் வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். யு.ஜி.சி. யினுடைய அனுமதியை அரசு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

டைட்டிஷியன்கள்.

*334 வினா—**திரு என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவ மனைகளில் எந்தெந்த இடங்களில் "டைட்டிஷியன்கள்" நியமிக்கப்பட்டுள்ளனர் ?

(இ) அவர்களின் பணி யாது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) (1) அரசு பொது மருத்துவமனை, சென்னை.